2022 ஏப்ரல் 21]

அரியலூர் மாவட்டத்திற்கு அருகிலுள்ள கடலூர், தஞ்சை ஆகிய மாவட்டங்களில் சம்பங்கி, மல்லிகை போன்ற பூக்கள் அதிகமாக சாகுபடி செய்யப்படுகின்றன. எனவே, அங்கு அரசு அல்லது தனியார் சார்பில், வாசனைத் திரவிய உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களை வழிநடத்தி, வழிகாட்டி, அவர்களுக்குரிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமாகத்தான், சமுதாயத்தில் அவர்களுக்கு ஒரு நல்ல இடத்தை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'நான் முதல்வன்' என்கின்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையில்,* (மேசையைத் தட்டும் ஒலி) *நம்முடைய இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டை உருவாக்குவதற்கான ஓர் அற்புதமான திட்டத்தை இப்போது செயலாக்கத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, வாசனைத் திரவியங்கள் அல்லது பூக்கள் அதிகமாகக் கிடைக்கக்கூடிய இடங்களில்* scent *தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குரிய முதலீட்டோடு உரிய தொழில்முனைவோர் வருகின்றபட்சத்தில், தமிழ்நாடு அரசினுடைய தொழில் துறை அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, அவர்கள் அந்தத் தொழிலைத் துவங்குவதற்கான வசதிகளை நாங்கள் செய்வோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

146—

சாலையை மேம்படுத்துதல்

***2922—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2022 ஏப்ரல் 21

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், காமராஜபுரம் சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரம், மகிழஞ்சேரி ஊராட்சி, காமராஜபுரம் சாலையின் நீளம் 840 மீட்டர் ஆகும். அச்சாலையினை மேம்பாடு செய்திட உத்தேச மதிப்பீடு ரூ.34.65 இலட்சம் ஆகும். இப்பணியினை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, மகிழஞ்சேரி–காமராஜபுரம் ஆகியவற்றை இணைக்கின்ற சாலை 840 மீட்டர் அளவிலே இருக்கின்றது. அதனை முன்னுரிமையின் அடிப்படையில் அமைத்துத் தரப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தப் பகுதியில் வாழுகின்ற மக்கள் அனைவரும் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். எனவே, அந்தச் சாலையை முன்னுரிமை என்று சொல்வதைவிட, விரைவிலே அமைத்துத் தர வேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணம், காமராஜபுரம் பகுதியிலிருந்து ரேஷன் கடைக்கு வருவதாக இருந்தாலும் சரி, ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு வருவதாக இருந்தாலும் சரி, மற்ற பணிகளுக்காக வருவதாக இருந்தாலும் சரி, மகிழஞ்சேரிக்குத்தான் வர வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அதனை விரைவில் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, என்னுடைய நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அச்சுதமங்கலம், ஆணைக்குப்பம், ஸ்ரீவாஞ்சியம், பனங்குடி, வீதிவிடங்கன் ஆகிய ஊராட்சிகளைச்

2022 ஏப்ரல் 21]

சேர்ந்த கிராமச் சாலைகளையும் சீர் செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையை அமைப்பதற்காகத் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே 'முன்னுரிமை அடிப்படையில்' என்று சொன்னாலும்கூட, இந்த ஆண்டு* TNRRIS *திட்டத்தின்கீழ், அந்தச் சாலையை மேம்படுத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, முன்னுரிமை அடிப்படையில் அதை எடுத்து இந்த ஆண்டே செய்து தரப்படும் என்று உறுதியளிக்கிறேன். மேலும், நீங்கள் பட்டியலிட்டு சொன்ன சாலைகளுக்கும் முன்னுரிமை வழங்கி, அவை மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள். இந்த வருடமே செய்து தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். அவருக்கு நன்றியை அழகாகச் சொல்லுங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எல்லா சாலைகளும் களிமண் சாலைகளாக இருக்கின்றன. அனைத்துப் பகுதிகளுமே களிமண் பகுதிகளாக இருக்கிற காரணத்தினால், அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். ஒரு மழை பெய்துவிட்டால், ஒட்டுமொத்த சாலைகளும் அப்படியே வீணாகிவிடுகின்றன. எனவே, ஒவ்வொரு மழைக்கும் வீணாகிற சாலைகளை ஒவ்வோர் ஆண்டும் சரி செய்வது என்பது சரியாக இருக்காது என்ற காரணத்தால், இந்தச் சாலைகளைச் சரி செய்வதற்கு ஒரு திடமான திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புத் திட்டமாக வகுத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

TNRRIS *திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு கிலோ மீட்டருக்குக்கீழே இருந்தால் டெண்டர் கோரப்படுவதில்லை*

என்கிற விதி இருப்பதாக நான் அறிகிறேன். திருவாரூர் மாவட்டத்தில் இருக்கிற அனைத்து கிராமச் சாலைகளும் கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டருக்குள்ளேதான் இருக்கின்றன. அந்த கிராமச் சாலைகளைச் சரி செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முன்வருவார்களா என இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை என்பது, இரண்டு தார்ச் சாலைகளை இணைக்கக்கூடிய இணைப்புச் சாலையாக இருக்கிறது. நீங்கள் குறிப்பிட்டு சொன்னதைப்போல, ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதியாகவும் இருக்கிறது. எல்லாவற்றையும் கடந்து, விவசாயிகள் விளைவிக்கின்ற பொருட்களை முக்கிய நகரங்களுக்குக் கொண்டு செல்வதற்கும் ஏதுவான சாலை என்ற காரணத்தால், இந்தச் சாலையைப் பொறுத்தவரையில், இப்பொழுது எந்தவிதமான கால அவகாசமும் இல்லாமல், உடனடியாகச் செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல, சாலைகள் ஓராண்டு காலத்திற்குள் மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றன என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இது தொடர்ந்து நடைமுறையில் இருக்கின்ற ஒரு திட்டம். ஆகவே, இனி எதிர்காலத்தில் இன்னும் திடமான சாலைகளாக அவற்றை மாற்ற வேண்டுமென்றால், தொழில்நுட்ப வல்லுநர்களோடு கலந்துபேசி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புறநகரில் இருக்கின்ற பல்லாவரம், தாம்பரம், சோழிங்கநல்லூர் ஆகிய 3 சட்டமன்றத் தொகுதிகளில், 15 ஊராட்சிப் பகுதிகள் உள்ளன. குறிப்பாக, பல்லாவரம் தொகுதியில் உள்ள பொழிச்சலூர் மற்றும் திரிசூலம் ஊராட்சிகள் மாநகராட்சியோடு இணைக்கப்பட்டுவிட்டன. ஏற்கெனவே ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடைபெற்றுவிட்டது. ஆனால், சாலைப் பணிகளுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லை. ஆகவே, அந்தச் சாலைகளை எல்லாம் சரி செய்வதற்கு ஊராட்சிப் பகுதிகளுக்கு

2022 ஏப்ரல் 21]

நிதி ஆதாரம் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, இப்பொழுது தாம்பரம் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டுள்ள நேரத்தில், அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதிகள், மாநகராட்சியில், ஒன்றியத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக இப்பொழுது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுவதோடு, நகர்ப்புற வளர்ச்சித் துறையின் சார்பிலும் வேண்டிய உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே, அவர் குறிப்பிட்டுச் சொன்னால், அந்தச் சாலைகளை மேம்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

கால்நடை கிளை நிலையம்

***3706—திரு. இ.மா. மான்ராஜ்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு வட்டம், ஆயர்தர்மம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*